# தமிழ் நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்

## கோயமுத்தூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

## (06.08.2016 முதல் 10.08.2016)

**அறிக்கைஎண் :063/2016** **தேதி: 05.08.2016**

**மாநிலத்தின் கடந்தவார வானிலை**

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 32°செ முதல் 33°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 23°செ முதல் 24°செ ஆகவும் பதிவானது. கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 16°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 10°செ முதல் 12°செ ஆகவும் பதிவானது. பொதுவாக தமிழ்நாட்டில் ஆங்காங்கே மழை பெறப்பட்டது.

**எதிர்பார்க்கப்படும் வானிலை: கோயமுத்தூர் (06.08.2016 முதல் 10.08.2016)**

வரும் நாட்களில் வானம் பெரும்பாலும் மேகமூட்டத்துடன் காணப்படும். வரும் ஐந்து நாட்களுக்கும் இலேசான துறல் மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 33°செ முதல் 35°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 23°செ முதல் 24°செ ஆகவும், காலைநேர காற்றின் ஈரப்பதம் 68 முதல் 80 சதவிகிதமாகவும், மாலைநேரகாற்றின் ஈரப்பதம் 60 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 18 கி.மீ அளவுக்கு பெரும்பாலும் தெற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

| தேதி | மழை (மி.மீ) | அதிகபட்ச வெப்ப நிலை (°செ) | குறைந்த பட்ச வெப்ப நிலை (°செ) | மேக மூட்டம் (ஆக்டா) | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | காற்றின் வேகம் (கி.மீ/ மணி) | காற்று வரும் திசை |
|---|---|---|---|---|---|---|---|---|
| 06.08.2016 | 0.5 | 33 | 23 | 6 | 80 | 60 | 18 | தெற்கு |
| 07.08.2016 | 0.5 | 33 | 23 | 6 | 80 | 60 | 18 | தெற்கு |
| 08.08.2016 | 0.5 | 33 | 23 | 6 | 80 | 60 | 18 | தெற்கு |
| 09.08.2016 | 0 | 35 | 24 | 4 | 68 | 60 | 18 | தெற்கு |
| 10.08.2016 | 0.5 | 35 | 24 | 4 | 68 | 60 | 18 | தெற்கு |

## வேளாண் அறிவுரை

- எதிர்பார்க்கப்படும், மழை இல்லாத நாளான 8.8.2016 அன்று இறவையில் விதைக்கப்பட்ட கம்பு, சோளம் மற்றும் மக்காச்சோளத்தினை அறுவடை செய்து, 12 சதவீத ஈரப்பதத்திற்கும் குறைவாக காயவைத்து சேமிக்கவும்.
- வரும் நாட்களில் தகுந்த வானிலை நிலவுவதால், இறவை குளிர்கால கம்போடியா பருத்தி விதைப்பிற்கு நிலம் தயார் செய்யவும்.
- தற்போதைய வானிலையில்
- மஞ்சளில் இலைப்புள்ளி நோய் வர வாய்ப்புள்ளதால் ஏக்கருக்கு 200 லிட்டர் தண்ணீரில் காப்பர்ஆக்ஸிகுளோரைடு 500 கிராம் அல்லது மேன்கோசெப் 400 கிராம் கலந்து தெளிக்கவும்.
- எதிர்பார்க்கப்படும் தூறல் மழையினை பயன்படுத்தி நடவு செய்து 45 நாட்களான கார் பருவ நெல்லுக்கு 2வது மேலுரமாக யூரியா 25 கிலோ மற்றும் பொட்டாஷ் 10 கிலோ இடவும்.

## குறுஞ்செய்தி

- எதிர்பார்க்கப்படும் தூறல் மழையினை பயன்படுத்தி நடவு செய்து 45 நாட்களான கார் பருவ நெல்லுக்கு 2வது மேலுரமாக யூரியா 25 கிலோ மற்றும் பொட்டாஷ் 10 கிலோ இடவும்.


பேராசிரியர் மற்றும் தலைவர்

வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம்

த.நா.வே.ப.கழகம், கோவை.